தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உயஎக	மலர்
ருசு	சாதாரண, கார்த்திகை (1970 — நவம்பர் — திசம்பர்)	அ

(சென்ற இதழ் தொடர்ச்சி)

"நகைக் கூட்டஞ் செய்தான் களவன் மகன்"

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

கருத்தொரு பட்டுக் களவிலொழுகும் ஒழுகலாற்றினைப் பாடுதலில் வல்லுநராய கபிலர், அதனைப் புலனெறியாகக் கொண்டு, களவினைக் கற்பாகச் சிறக்க. அப் புலனெறியை நாடகமாக்கி, கற்பின்பாற் படுத்தும் களவொழுக்கம் சிறந்தாரிடத்தே அமைந்து அறத்தொடு நிற்றலாகிய நற்றிறங் கொள்ளும் வாய்ப்பினையும் இக்கலிப்பாவில் தெளிய வைத்தார். இப்பாவினில் படைக்கப்பட்டுள்ள பெருமை பிறங்கும் மாந்தரும் மடவார்களும், அன்னவர் மெய்க்கட்பட்டு விளங்கும் தோற்றமும், நுண்ணுகர்ச்சிகளும், இயங்கும் நிகழ்ச்சியும் உயிரோட்டமுடையன. களவில் கண்டு காதல் கொண்ட தலைவனும் தலைவியரும் அறிவு, அன்பு, பண்பு, அழகு ஒழுக்கம் முதலாய வகையில் ஒத்த இயலினராயிருத்தல் வேண்டுமென்பதைத் தொல்காப்பியர் கூறியவாறு 'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' என இக்கவிதையில் கபிலர் உணர்த்தியுள்ளார். கபிலர் காட்டும் தலைவி அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், செறிவு, செம்மை, அறிவு நிறை போன்ற பல் குணச் சால்புடையவள். அச்சம் மடம் நாணம் என அத்தனையும் குடி புகுந்தாற் போன்ற கடடழகுடையவள். தலைவியின் இயல்புகளை.

கற்பும் காமமும் நாற்பால் ஒழுக்கமும்
மெல்லிய பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்-

என்ற தொல்காப்பியரின் நூற்பாவுக்குத்தக ஈண்டு எடுத்துக் கூறிய முறைமை மிகவும் விழுமியது.

இதனுன் அறிவால், ஒழுக்கத்தால், இச்சையால். குழைந்த சொல்லால், செயலால், பண்பினுல், காக்கும் தகைமையால், தலைவியின் பெண்மை, கவின் பெற்றும் ஏற்றமுற்றும் விளங்கு தலைத் தெளியவைத்து, தலைவி, தனித்திருத்து பட்டியொடு விளையாடுவதை நினைந்து மகிழும் இயல்பையும் காதல் முறையில் தம் அழகுப் பணபினை பாராட்டி பேணியதையும் கவிதை வடிவில் கபிலர் காட்டியுள்ளார். மற்றும் கற்பெனப்படுவது களவில் வழித்தென குறிப்பால் புலப்படச் செய்து. களவு ஒழுக லாறுகளில் பெண்மையின் காதல் முறை எவ்வண்ணம் இன்ப ஊற்ருக இலங்கி அறிவு வளம் பெருக்கி வாழ்வில் அழகினையும், இன்பினையும் அளிக்கவல்ல தென்பதையும் விளங்க வைத்தார். கழி பேருவகையொடு விருந்துவக்கும் முகம், தலைவியின் அறம் வளர்க்கும் அகத்தினையும், அன்பு புன்னகை பூத்து நிற்கும் வழி அவளது சீரிய ஒழுக்கத்தினையும், நடைவழி, அவளது நற் செயலையும், உடையாடல் வழி, அவளது சீரிய குணத்தினையும் குறிப்பால் புலப்படச் செய்துள்ளார். இத்தகைய அரும் பண்புகள் பல இவள்பால் மிளிர்ந்ததால் தலைவி, அழகு நலத்தோடு காதலன் பின் உருவமாக அமைந்து விளங்குதலை விளக்கியுள் ளார். தலைவனுக்குத் தலைவி, அன்பு பூக்கும் மிக்க ஒளியோடு முகம் அளாவ. தண்ணீரினை மெல்லவார்க்கத் தொடங்கியபோது. தலைவன். இளமைவேகத்தால், அவளது முன் கையை உணர்வின்பமும் உடலின்பமும் பெருக, இறுகப் பிடித்த ஞான்று, வினவலும் சினவலும் செய்யாது. தலைவி தன்னை மறந்த நிலையில் அலற, அக்கணமே வந்த அன்னைக்கு. 'நீருண்ணுங்காலை விக்கினன்' எனத் தலைவி கூறி. காதல் வலைப்பட்ட தன் நெஞ்சத்தினை வெளிக்காட்டாதும், தலைவனுக்கு பழியும் ஊறும் நேராதவாறு தன் கடமையுணர்வால் நாணி மறைத்துப் பேசும் சொல்லாற்றல் வெகு நயமுடைத்து. மற்றும் மெய்யூற்றின்பத்தின் மூலம் தலைவனது அன்பின் வழி, தலைவி உணர்ச்சியின்பத் திற்றிளைக்க, கபிலர் வழியமைத்து, தலைவனும் தலைவியும் உணர்ச்சியொத்தலாகிய சிறந்த இன்பத்தின் திறத்தை உருப்படுத்தும் நிலை, உள்ளுந்தோறும் உள்ளத்தை மிகவும் கவர்ந்து நிற்கும் நீர்மையது.

'நீர்விக்கி வருந்தினன்' என்று தலைவி கூறுவதின் மூலம் தன் தாய்க்குப் புலனுகாவாறு, நீர்மிகில் சிறையுமில்லை என்பதற்

கேற்ப, தன் காதல் வேட்கை மிகுதியையும் ஆழத்தையும், தன் தலைவன் நன்குணருமாறு குறிப்பால் தலைவி வெளிப்படுத்தியது வியத்தற்பாலது. மற்றும் அவனது காதல் சித்தத்தில், கள்வெறியினையும் ஊட்டி விட்டாள். அதனுன் தலைவியின் இணக்கத்தையும் அன்பையும் பெற்றுவிட்டதாக எளிதாகக்கண்டு கொண்டான், தலைவன். பாக்குத் தெரிந்தாற்போன்று அங்ஙனம் நறுக்கென்று கூறிய சொல்லாற்றல் என்னே! தலைவன் தன்னை, அணுவனைத்தும் இன்பமேற இறுகப் பிடித்ததால், காதலின்பம் உயிரைத் தழுவிச் செல்லவே, அறிவுடை அழகியார், நன்மை பயக்கும் பொய்யையும், மெய் போல், நாகரீகத்தோடு விளக்கிக் கூறும் முறையில், இதய நிறைவோடும், வீரியத்தோடும் சிந்தனை ஒளியினையும் நடிப்புத் திறனையும் காட்டிவிட்டார். நாணமும் அச்சமும் உள்ளத்தைக் கௌவிக் கொள்ள, ஒருபுறம் அறிவு நிலையும் உணர்வு நிலையும், மறுபுறம் கடமையும் காதலும் ஒன்றோடொன்று போரிட்டு நிற்க, தலைவி, நீருண்ணுங்கால் விக்கினன்' என்றது அவள் தன் அறிவுக் கூர்மையும் சொல்லாடும் திறமையும் எல்லை மிகந்து பரவும் காதலை அடக்கி ஆளும் திண்மையும் காட்டுகிறது. ஈண்டு மாசற்ற குலத்தின் கண் பிறந்தார் சால்பில செய்யாரென்பதும் உணரப்படும். தன்னைத் தன் தலைவனுக்கு ஆளாக்கிவிடும் தகைமையால் வெட்கத்தைக் கைவிட்டு, தலைவனது வேட்கையை அடக்கிவிட முடியாது தவித்தும், நாணத்தைப் போற்றி, தலைவி, அவனை விட்டு விடவும் மனமுமில்லை. இதனால், உயிரினுஞ் சிறந்தது நாண்; நாணினுஞ் சிறந்தது செயிர்தீர் காட்சிக் கற்பு என்பது அவளது உள்ளமும் உடலகத்து உறுப்புகளும் நன்கறிந்த உண்மையென, கபிலர் சுட்டிக் காட்டி முடித்து நிறுத்தியதூஉம் காண்க. காமர் கடவுளும் ஆளும் உயர்ந்த கற்பியலுடைய இச் சொல்லாட்டி, தலைவனின் நலன்கட்கு மிக பொருத்தமாய் தலைவியென கபிலர் எடுத்துக்காட்டி. சான்றாண்மைக்கினிய அரிய பண்புகளோடு காதலன்பும் அமைதியும் அமைந்து அறத்தொடு நின்று விளங்கும் பெண்மையின் பெருமையினை உணர வைத்தார். மற்றும் கபிலர் பெருமான், காதல் வயப்பட்ட இரக்கவுணர்ச்சியின் மூலம் தலைவியின் அன்பின் வேகத்தையும் பெண்மைத் தத்துவத்தையும் அளந்து காட்டி விடுகிறார்.

நயத்தேன் துளிக்கும் 'நகைக் கூட்டஞ் செய்தான் கள்வன் மகன்' என்ற தொடரிலும் கபிலர், வீரத்திற்கு குழையும் காதலுள்ளத்தை மனவெழுச்சி படக் காட்டும் திறன் பாராட்டற்குறியது. நகைக் கூத்தின் வழி, தலைவி, தன் காதலனது உள்

ளம் இன்பப் பூரிப்பால் முறுவல் பூத்து உச்ச நிலையில் ஊசலாடுவதைக் காண்பதினையும் கபிலர் விளக்கியுள்ளார். தலைவன் நகைக் கூட்டஞ் செய்த ஞான்று உள்ளப் பிணைப்பால் தலைவியினது முகம் நுண்ணிதின் மலர்ந்து மகிழ்வதை அண்மைக் காட்சியில் காட்டப்படுவது உவகையின்பம் உணர்த்தி கவிதையழகை மிகுதிப் படுத்துவதாயிற்று. தலைவன் நகைக் கூட்டம் செய்ததில், தலைவி தன்னை விரும்பும் நல்ல நிலையில் தலைவன் தன்னெதிரே நின்றுள்ளான் என்ற எண்ணமும், தலைவன் கொண்டுள்ள காதலன்பு எத்தகைய தென்பதை தலைவி தெரிந்துகொள்ளும்படி நகைத்த வகையும், அவள் மனதைக் குளிரச் செய்யவே, அவள் அவனோடு இணைந்து வாழப்போகும் எதிர்காலத்தை நினைந்து பெரிதும் பெருமிதமுற்றாள். மற்றும் அத்தகைய நகைக் கூட்டத்தில் மோகக் கருத்துக்களை மோனமாகத் தலைவன் அள்ளித்தெளித்துவிடவே, தலைவி, அரும்பு நகை, மொட்டு நகை, போது நகை, மலர் நகையென்ற பல நகைகளின் தொகுதியைக் கண்டாள்; பலவித மென்மையும் தூய்மையும் கவர்ச்சியும் வாய்ந்த வண்ணங்களையும், மணத்தையுங் கொண்ட மனம்பூத்த அம் மலர் நகையில் உணவாகிய காதல் தேனையும் அருந்த விரும்பினாள். இக் காட்சியால் இனிமையோடு அறிவு செறிந்த அன்புக் காதலழகு மலர, மன நலத்தோடு காதலுண்மை உள்ளத்தில் ஊறி உயிரிலும் பாய்ந்து உறுதியாகிறது; காதலின் அமைதி ஒளிர்ந்து ஆனந்தத்தில் மூழ்கி விடுகிறதும் தெளிவாகிறது.

இணைபிரியா வாழ்வறம்பேணும் குறிக்கோளுடையவளாய், தலைவி தன் தலைவனை, காதலின் விளைவாய களவொழுக்கத்திற் றலைச் சிறந்து அறத்தொடு நிற்றலென்ற வெற்றியில் திளைத்த வீர மகனெனக் கருதி, அவனது காதல் ஒழுக்கத்தில் திரு அமைத்து, தன் உள்ளத்தே அனுபவிக்கும் இன்பத்தைப் புறங் காட்டாது, அத்திருவிலும் 'களவன் மகள்' என உரு சமைத்தாள். மற்றும் தலைவன் அஞ்சா நெஞ்சம் படைத்த ஓடாப் பூட்கையரென்றும், காஞ்சி சான்றலையவரென்றும் பலவாறு எண்ணுவாளாயினள். காதலும் கற்பும் இனிதமைந்த தலைவி, தன் தலைவனது வீரத்திற்கு அடிப்படையாக அமைந்த காதலினிமையினை உணர்ந்தாள்; அவன்பால் அன்புமுற்ற வீரமும் வளர்ச்சி யெய்தியதையும் கண்டாள், வீரதிற்கு அடிப்படையான கருணை ஈரத்தின் உருவமாகத் தன் தலைவனை விளங்க வைத்து அவனது பெருமிதப் பண்பினைத் திகழவும் செய்தாள்.

(244 ம் பக்கம் பார்க்க)

சங்கமனம் மதித்த பூத்தலைமகளிர்

திரு. இர. குழந்தைவேலு, எம். ஏ., கோவை.

1

சங்கமனம் நாகரிகச் செம்மையால் பீடுற உயர்ந்தது; உரம் வாய்ந்த தனித்தரத்தால் தமிழர்க்கு நல்லுணர்ச்சி வழங்கி வருவது. அத்தமிழ் நெஞ்சத்தைப் பழந்தமிழ்ப் பாடல்கள் விளக்கி வெளியிடுகின்றன. பழந்தமிழ் மக்கள் வாழ்க்கையின் நோக்கங்கள் பல. அந் நோக்கங்களின் அடியில் ஊறும் எண்ணங்களும் செயல்களும் உணர்த்தும் குறிப்புக்கள் பல. அக்குறிப்புக்களில். பெண்ணினம் பூச்சூடிய நிகழ்ச்சிகளும் பொலிகின்றன, இங்குப் பழந்தமிழ் மகளிர் தலையில் மலரணிந்த நற்குறிப்பினைக் குறித்துச் சங்கப் பாக்கள் அறிவுறுத்திய உண்மை அளந்து ஆராயற்பாலது

அறிஞர்-டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள், பண்டைத் தமிழ்க் கன்னியர் மலர் சூடார் என்றும், அக்குமரியர் பூவணியும் உரிமையைத் திருமண நாள் முதல் பெறுகின்றனர் என்றும், தம் ஆராய்ச்சியில் கண்ட முடிபினைத் 'தமிழ்க் காதல் [1]' என்னும் நூலில் நிறுவினர்கள் சிந்தனையைத் தூண்டிய இக்கருத்து. அந் நாளைய மகளிர் மலர்சூடி வந்த வழக்கினை ஆய்ந்து தெளிந்து முடிவு காட்டுதற்கு என்னை உந்தியது.

2

இளங் குமரியர் பூ முடித்த திறத்தை முதலில் நிறுத்திச் சங்கப் பாக்களின் துணைகொண்டு தெளிவாக்குதல் கடமையாகும். கலித்தொகையில்,

"பறை அறைந்தல்லது செல்லற்க என்னு
இறையே தவறுடை யான்"

என்னும் ஈற்றடிகளைக் கொண்டு நிறைவுறும் பாடலின்,

1. 'தமிழ்க் காதல்'-பக். 157-165; முதற் பதிப்பு; மார்ச்சு, 1962

"கொழுநிழல் ஞாழல் முதிரிணர் கொண்டு
கழும முடித்துக் கண்கூடு கூழை
சுவன்மிசைத் தாதொடு தாழ வகன்மதி
தீங்கதிர் விட்டது போல முகனமர்ந்
தீங்கே வருவா ளிவள்யார்கொல்? [2] "

என்னும் முன்னைப் பகுதி, இளையவள் ஒருத்தி மலரணிந்த சிறப்பைப் புலப்படுத்துவதாகும். ஞாழலினது முதிர்ந்த பூத் தொகுதியும் கூந்தலும் தம்முள் மயங்கச் சூடிக்கொண்டாள் அவள். மலர்த்தொகை வாய்ந்த அவளது கூந்தல், பூத்தாதொடு தோளிலே தாழ்ந்து விளங்கியது. இப் பூச்சூடிப் பொலிந்த நல்லாள் எழிலை விளக்கிக் கூறிய தலைவனுக்கு,

'இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து" [3]

என்ற எண்ணமும் ஓடியது. எனவே, தலைவன் அவளை அணுகினன்; தன் நெஞ்சக் கொந்தளிப்பினை வெளியிட்டான். அவள் 'யாதொன்றும் வாய்வாளது' நடந்தாள். அவன் சொல் எதிர் பெருது நெஞ்சுருகித் தொடர்ந்து மொழிந்தவற்றுள்,

"நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமரும் தவறிலர்" [4]

என்று இசைத்த செய்தியும் இங்குப் போற்றிக்கொள்ளத்தக்கது.

இக் குறிஞ்சிக் கலியால், சுற்றத்தார் புறத்தே புறப்படவிட்ட கன்னிமை கனியாத மகளே, கூந்தலை அழகு செய்துகொள்ளப் பூச்சூடிக்கொண்டாள் என்று தெளிவுறும் கருத்து ஈண்டு நன் மதிப்புக்குரியது. இக் கருத்திற்கு,

"இது காமஞ் சாலா இளமையோள்வயின்
ஏமஞ்சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னெடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெருஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பில் இன்புற்றது
என்பதனல் தருக்கிச் சொல்லிச் சொல்லெதிர் பெருன்
இன்புற்றது" [5]

என்னும் இப்பாடல் துறைக்குறிப்பும் வலிவு சேர்ப்பதாகும்.

---

2 கலித்தொகை, 56. 3. கலி. 56 : 13.
4. கலி. 56 ; 30 - 31. 5. கலி. 56.

முன்னை நாளில், தலைவியும் தோழியும் கழிக்கரை வளைத்த சோலையிடத்து விளையாடலாயினர்; தம் நெஞ்சமறியக் கரந்து செய்யும் எச்செயலிலும் ஈடுபட்டாரிலர். அங்குக் கண்போல் நெய்தல் பூத்திருந்தது அது, அன்னையின் கண்ணிற்பட்டது. மங்கை இருவரொடு மாறுபட்ட குறிப்புக்கொண்ட அன்னை, அம் மகளிரை நோக்கி நெய்தல் மலரெடுக்கக் கூறினளில்லை. இங்ஙனம், ஒருமைப்படாத அன்னை மனத்தில் பட்ட கருத்து என்னை என்று நினைக்கத் தொடங்கிய தோழி, தன் ஐயத்தைத் தலைவிக்குக் கூறினள். இம்மன நிலையை,

"எவன்குறித் தனள்கொ லன்னை கயத்தே
கண்போற் பூத்தமை கண்டு நுண்பல
சிறுபா சடைய நெய்தல்
குறுமோ சென்றெனக் கூறு தோளே" [6]

என்று குடவாயிற் கீரத்தனர் வெளியிட்டார்.

இங்குப் புறத்தே சென்று பூக்கொய்தலில், இத்துணை நாளும் அன்னை அளித்திருந்த உரிமையையும் தகுதியையும் பருவமகளிர் இழக்க நேர்ந்த சூழ்நிலை, கன்னியர் பூச்சூடுவர் என்ற கருத்தைச் சிறப்புறப் புலப்படுத்த முன்னிற்கின்றது.

கட்டழகு நிறைந்த இளமகள் ஒருத்தி நின்ற இடம் கடற்கரைச் சோலை அந் நங்கையின் எழில், தலைமகன் நெஞ்சத்தை உருக்கிக் கரைத்தது. அதனைத் தெளிந்து, அவள் வடிவழகு நலத்தையும், வாழ்ந்த இடத்தையும் தலைவனிடம் விரித்துரைக்க வேண்டினன் பாங்கன். தலைமகன் கண்ட உண்மைகளை எடுத்திசைத்தவற்றுள், அழகி தன் குழலிடத்தே கடற்கழியில் பூத்த மலரணிந்த குறிப்பும் ஒன்று. இக் கருத்தினை,

"கடற்கோடு செறிந்த வளையார் முன்கைக்
கழிப்பூத் தொடர்ந்த விரும்பல் கூந்தல்
கானன் ஞாழற் கவின்பெறு தழையள் [7]"

என்னும் ஐங்குறுநூற்று அடிகள் காட்டும். இப்பாடலும், குமரியர் பூச்சூடினர் என்னும் சங்கத் தமிழ் உலக ஒழுக்க உறுதி நிலையை உணர்த்தும்.

---

6. நற். 27 : 9 - 12. 7. ஐங், 191 : 1 - 3.

இம்மனப்போக்கைத் தொல்காப்பியத்தின் களவியலில்,

"வண்டே இழையே வள்ளி பூவே" [8]

என்னும் ஐயப்பட்டான் துணிதற்குக் கருவி உணர்த்த எழுந்த நூற்பாவின் தலைத்தொடரில் பெய்யப்பெற்ற 'வண்டே' 'பூவே' ஆகிய இரண்டு கிளவிகளிலிருந்து ஒருவாறு அறிதல் கூடும்.

3

இப்பகுப்பில், இளமகள், இல்லறத்தலைவி என்ற வேறுபாடில்லாப் பொதுத் தன்மையில் மகளிர் கூந்தல் கொண்ட மலர் மதிப்பு விளங்குதல் நோக்கத்தக்கது. சங்க இலக்கியத்தில்,

"புதல்வர் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர்" [9]

என்று அகநானூற்றிலும்,

"வயவுறு மகளிர்" [10]

என்று புறநானூற்றிலும் காணப்படும் 'மகளிர்' என்பது மணந்து இல்லறங் கண்டவரையும்,

"சேயிழை மகளிர் ஆயமும்" [11]

என்று அகநானூற்றிலும்,

"பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்" [12]

என்று புறநானூற்றிலும் விளங்கும் 'மகளிர்' என்பது மணவாத நங்கையரையும் குறித்தற்கு வழங்கப் பெற்றிருத்தலைத் தெளியலாம். இப்பொது வரம்பில் கையாளப் பெற்ற 'மகளிர்' ஆட்சிப் பொருளைத் தழுவி, மேல் ஆய்வில் வலியுறும் கருத்தினை அறிதல் கூடும்.

அடும்பின் மலரைக் கலந்து தொடுத்த நெய்தல் மாலையைக் கூந்தலில் விளையாட்டு மகளிர் முடிந்திருந்தனர். இதனை,

"அடும்பி னும்மலர் விரைஇ நெய்தல்
நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்
ஓரை மகளிர்" [13]

என்பதால் அறியலாம்.

8. தொல். பொருள். 3 : 4,
9. அக. 86 : 11 - 12.
10. புற. 20 : 14,
11, அக. 369 : 5.
12 புற. 200 ; 12.
13. குறு. 401 : 1 - 3

சாரற் புறத்து வாழும் பார்ப்பன மகளிர் கானத்தில் பூத்த முல்லை மலரைப் பறித்துச் சூடினர் என்பது,

> "கான முல்லைக் கயவாய் அலரி
> பார்ப்பன மகளிர் சாரற்புறத்து அணிய" 14

என்ற பகுதியால் வெளிப்படும்.

ஐங்குறுநூற்றுப் பாடலில், 'மணக்கும் மலரணிந்த கூந்தல் மகளிர், தைத்திங்களில் நீராடும் தண்ணிய கயம் போல' என்னும் உவமை,

> "நறுவீ யைம்பான் மகளி ராடும்
> தைஇத் தண்கயம் போல" 15

என்று விளங்குகின்றது. இவ்விடங்களில் பெய்யப்பெற்றுள்ள 'மகளிர்' என்னும் சொல், பொதுவாகப் பெண்மக்கள் யாவரும் என்ற கருத்தினுல் ஆகும்.

இப்பழந்தமிழ்ப் பாடல்களில் வரும் குறிப்புக்களிலிருந்து, திருமணம் கண்ட மகளிரே பூச்சூடினர் என்றோ, மணம் புரியாத மங்கையரே மலரணிந்தனர் என்றோ வரையறுத்துக் கூறுதல் இயலாதாகின்றது. ஆனுல், பெண்மக்கள் யாவரும் என்ற கருத்தில் ஆளப்பெற்ற 'மகளிர்' என்னும் சொல்லைக்கொண்டு, இருதிறத்தாரும் மலரணிந்தனர் என்ற தகுதி அறியப்படும்.

4

இப்பிரிவில், கூந்தல் மலர் வனப்பு இழந்த அவலத்தின் தொடர்பில் கிளைக்கும் கருத்துக்கள் எண்ணத்தக்கன.

தலைமகன் இல்லறம் காக்கும் கடமை நாட்டத்தால் பிரிந்தான். எனவே, தலைமகளுக்குத் துயரம் தணியத் தோழி ஆறுதல் மொழிந்தாள். இல்லறம் பூண்ட தலைவியோ, குறித்த பருவத்தே தலைமகன் வாராமையால் கலக்கத்தில் ஆழ்ந்தாள்; அத்தணியாத் துயரால் கூந்தலைப் புனைந்தாளில்லை; பின்னப் பெருமையால் வறிய கூந்தல் கூடிக்கற்றையாயிற்று; அக் கொத்தாகிய கூந்தலை வீணே தடவி வருந்தினுள், இங்ஙனம் நொந்து மெலிந்த துன்ப நிலையை.

---

14. நற். 321 : 2 - 13. 15. ஐங். 84 : 3 - 4,

"ஈங்கே வருவ ரினைய லவரென
அழாஅற்கோ வினியே நோய்நொந் துறைவி
மின்னின் றூவி யிருங்குயில் பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்
வறுங்குரற் கூந்த றைவரு வேனே" 16

என்னும் குறுந்தொகைப் பாடல் துணையாக அறியலாம்.

தலைமகனுக்குப் புறத்தே முடித்தற்குரியவினை நிறைவுறவே. தலைமகள் நினைப்பில் மூழ்கி நின்றுன் அவன். அந்நினைவில் நிகழ்ந்தவற்றில், 'அவளிடம் பிரிவால் சேர்ந்த துன்பம், முல்லை மாலையைச் சூடிப்பெருக்கும் பொலிவை விலக்கவே. கூந்தல் அழகை இழக்கும்' என்ற ஓர் எண்ணம் குறிப்பாய்க் கருதத் தக்கது. அவன் வருந்தித் தன்னெஞ்சிற்கு,

"தண்கார்க்கு ஈன்ற பைங்கொடி முல்லை
வைவாய் வான்முகை அவிழ்ந்த கோதை
பெய்வனப்பு இழந்த கதுப்பும்" 17

என்று இயம்பினுன்.

ஆவூரைக் கொண்ட நெடுங்கிள்ளி நீள்மதில் வாயிலைத் திற வாதடைத்தான். அவ்வூர் அல்லலுற்று ஆற்றுது கொடுந் துயருற்றது. அந்நிலையில், நெடுங்கிள்ளியிடம் அணுகிக் கோவூர்கிழார் உயர்ந்தன உரைத்தவற்றுள்,

'மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும்" 18

என்னும் மகளிர் பூச்சூடாது, அழகு குன்ற முடித்த கூந்தலின் அவலம் ஊட்டும் காட்சி, மலரணிதலைக் குறித்த ஆராய்ச்சி நோக்கிற்குத் தக்கதொரு சான்றுகும்.

புகழ்ப்பேகன் தன் வாழ்க்கைத் துணை நலத்தாள் கண் ணகியைத் துறந்தான்; வேட்கையுற்றுப் பிரிந்து மற்றெருத்தி நலன் துய்கப் பிரிந்தான். எனவே முல்லைவேலி நல்லூரில் அருந்துயரால் வாடிய கண்ணகியின் மையிருங் கூந்தல், சூழும் கமழ்புகை கொள்ளவில்லை; பூசும் நெய் பெறவில்லை; தோயும்

---

16. குறு. 192:1-6,
17. அக. 144:3-5,
18. புற. 44:6-7

நீர் படியவில்லை; புனையும் புதுப்பூச்சூடவில்லை. அக்கொடுமைகள் அனைத்தையும் அகற்றியருளப் பேகனைச் சூழ்ந்து, புலமைச் சான்றோர் நால்வர்[19] எடுத்துரைத்தனர். அப்புலமைத் திருவினருள் இருவர் நல்லெண்ணங்களை,

"ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்கநின் மாவே"[20]

என்றும்,

"அரிமதர் மழைக்கண் ணம்மா அரிவை
நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்
மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
புதுமலர் கஞல இன்று பெயரின்
அதுமனெம் பரிசி லாவியர் கோவே"[21]

என்றும் வருகின்ற புறநானூற்றுப் பகுதிகளால் உணரலாம்.

ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் ஆண்மை வீரன். அவ்வல்லவனுகிய சாத்தன் மாய்ந்தான். அவலம் பெருகிய ஒல்லையூர் நாட்டில் பூத்த முல்லைப் பூக்களை இளைய மறவர் சூடவில்லை; மலர் சூடி அழகு செய்து கொள்ளும் வளையணிந்த மகளிரும் அம்மலரெடுக்கவில்லை; பாணன் கொய்து யாழில் சேர்க்கவில்லை; பாடினியும் தலையில் சூடிக்கொள்ளவில்லை. இவ்வாறெல்லாம், பெருஞ்சாத்தனை இழந்தநாட்டின் துன்பத்தை,

"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே"[22]

என்னும் கையறு நிலைப்பாட்டாக வடித்தார் குடவாயிற் கீரத்தனார். இப்பாடலில் வழங்கியுள்ள, 'வளையோர்' என்ற சொல் வழக்கு, 'மகளிர்' என்னும் பொதுக் கூறின் பொருளுடையதாதலை மதிப்பிட்டு ஏற்றுக்கொள்ளலாம்.

---

19. பரணர், அரிசில்கிழார், கபிலர், பெருங்குன்றூர் கிழார்.
20. புற. 146 : 9 - 11. 21. புற. 147 : 5 - 9.
22. புற. 242.

முன்னர் விரித்த ஐங்குறு நூற்றுப்பாடலில்,

"கடற்கோடு செறிந்த வளையார் முன்கை"[23]

என்றவிடத்தில் மணங்காணுத இளமகள் வளையணிந்த குறிப்பு விளங்குகின்றது. பிறிதோரிடத்தில்,

"அறனில் கூற்றந் திறனின்று துணிய
ஊழி னுருப்ப வெருக்கிய மகளிர்
வாழைப் பூவின் வளைமுறி சிதற"[24]

என்று மணவாளன் மாய்ந்த கொடுமையில் துடித்து அறைந்து கொண்ட கைகளிலணிந்த வளையல்களின் முறிகள், வாழைப் பூவைப் போலச் சிதறின என்றவகையால், மணங்கண்ட மகள் வளையலணிந்த வழக்கைப் புறநானூறு சுட்டும். இங்கு ஒருங்கு வைத்து எண்ணிய ஒற்றுமையில், இளங்கன்னி, இல்லறக் கிழத்தி என்னும் இருநிலையினரும் வளையணிந்த முறைமை வெளிப்படும். எனவே, மேலைக் காட்டிய கையறு நிலைப்பாட்டின் 'வளையோர்' என்னும் சொற்றொடரைக்கொண்டு, பெண்ணினம் முழுமைக்கும் மலரணியும் உரிமை இருந்த ஏற்றத்தை அறுதியிடுவது எளிதாயிற்று.

இச் செய்யுட்களின் அடிக்கருத்துக்களைத் தொகுத்துப் பகுத்துத் தெளியவே, புறக்கடமைகளை நிறைவேற்றுதற்கு இல்லறத் தலைமக்கள் பிரிந்த நாட்களில் துணைவியர் பிரிவாற்ருமையால் வாட்டங்கொண்டு, பூச்சூடிப் பொலியாத கூந்தலொடு தோன்றினர் என்றும், நாடடில் வேந்தர் இருவர் வேறுபடவே இடுக்கண் வந்து நடுக்கம் நிலைத்த சூழலில் மகளிர் பூவின்றிக் கூந்தல் முடித்தனர் என்றும், கணவர் பரத்தையரை நாடிப் பிரியவே மகளிர் நெஞ்சம் நொந்த நிலையில் கூந்தலுக்கு மலரழகினைக கூட்டினரில்லை என்றும், மன்னன் மடிந்த அவலம் மகளிர் மனத்தை வளைத்த கொடுமையில் வளைக்கையர் சூடும் மலரெடுத்தலையே விலக்கினர் என்றும் பழந்தமிழறிஞர்கள் விளக்கமுறச் செய்திருத்தல் புலப்படும்.

இங்குப் பெண்ணுலகம் பூச்சூடலை மறந்தால்—ஒளித்தால்—நாட்டிலும் வீட்டிலும் பூத்த துயரம், மறைப்பின்றிக் கண்ணுரக் காணத்தக்கதாகும் என்ற முடிபு, ஈண்டு நுணுகி நோக்கவே உறுதியாகின்றது.

நாடறியும் கற்பொடு இசைபடத் தமிழ் மகளிர் வாழ்தற்குத் துணையாவது திருமணம். இத் திருமணத்தால் "நெஞ்சுதளை

23. ஐங். 191 : 1. 24. புற. 237 : 9-11.

அவிழும்'' [25] இன்பத் தலைநாளில் மகளிர் கூந்தலிடத்து மல ரணிதல் உண்டு என்பதனைச் சங்கப் பாக்கள் உணர்த்துகின்றன.

மக்களைப் பயந்த மகளிர் நால்வர் ஒருங்குகூடினர்; மண மகளுக்கு நல்வாழ்த்து இசைத்தனர்; மணவிழாச் செல்வியின் கூந்தலில் நீரொடு சேர்ந்த பூக்களை, நெல்லொடு கலந்து விளங் கச் சொரிந்தனர். இம் மணக்காட்சியின் பகுதியைத் தாம் பாடிய அகநானூற்றுப் பாடல் ஒன்றில்,

''புதல்வர் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிய
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென
நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் கழிந்த பின்றை'' [26]

என்னும் அடிகளில் நல்லாவூர்கிழார் அமைத்துள்ளார்.

விற்றூற்று மூதெயினனார் யாத்த, திருமணக் காட்சி வழங் கும் அகநானூற்றுப் பாடலும், கூந்தலில் தலைமகள் பூச்சூடிய சிறப்பை அழகுபடக் குறிப்பிட்டுள்ளது. தலைமகளைத் தமர் தரக்கொண்டான் தலைமகன். இவ்வதுவை வழித் தனக்கு மனையாளெனப்படுத்தல் கண்ட தலைமகன், அவளொடு உவகைக் குக் கூடியிருந்த தலைநாளிரவு அது. அவளுடைய கூந்தலில், ஆம்பற் பூவின் இதழ்களால் தொடுக்கப்பெற்ற பருத்த மாலை நீக்கப்பெற்றது; தேர்ந்த மலர் சேர்க்கப்பெற்றது. தனியிடத்தே நாணத்தில் தவித்த தலைவிக்கு, அம் மலரணிந்த கூந்தல் இருள் தந்து தக்கவாறு உடலை மறைத்தற்குத் துணையாயிற்று. இதனை,

'' ஒய்யென
நாணினள் இறைஞ்சி யோளே பேணிப்
பரூஉப்பகை ஆம்பற் குரூஉத்தொடை நீவிச்
சுரும்பிமர் ஆய்மலர் வேய்ந்த
இரும்பல் கூந்தல் இருள்மறை ஒளித்தே'' [27]

என்று விற்றூற்று மூதெயினனார் குறிப்பிடுவர். இந் நிகழ்ச்சிக் குறிப்புக்களால், மலரணிதல் திருமணத்தோடு ஒட்டி நடை யிட்டுப் பழந்தமிழ் மகளிர் வாழ்க்கையின் இன்பச் சூழ்நிலையைப் பற்றிக் கலந்து திகழ்ந்த பெற்றி தெள்ளிதின் புலப்படும்.

[தொடரும்]

25. தொல். பொருள். 4:2- 26. அக. 86:11-17.

(234-ம் பக்கம் தொடர்ச்சி)

கபிலர் காட்டும் தலைவனே அன்பும் அறிவும் ஆண்மையும் வண்மையும் வீரமும் கட்டழகும் நிறைந்த திருவாளன்; அறமும் ஆன்ற ஒழுக்கமுடையான்; சீலத்தாலுயர்ந்த செல்வன்; மாசற்ற நெஞ்சுடையான்; பாடறிந் தொழுகும் பண்புடையாளன்: மனவுறுதியும் ஆள் வினையுமுடையவன்: சான்ருண்மை மிக்கவன். இளம் பிராயத்திலிருந்து தலைவியுடன் இன்ப விளையாட்டுகள் கொண்டு வளர்ந்த காரணத்தால் இயல்பாக சந்திக்கப் பெறமாட்டாத நண்பகலில், உணவு நேரத்தில், துன்பம் அறியா நிலையில், தலைவியைக் காண நேரிடையாக அவளது இல்லின் கண் வந்தது, அவனது அஞ்சா வீரத்தினையும், குழந்தை உள்ளத்து அன்பினையும் புலப்படுத்தா நிற்கும் வீரத்தைக் குறித்ததினுன் அவனது உடலுறுதியையும் வலியுறுத்தப்பட்டது காண்க. மற்றும் பழைய உணர்வை, உள்ளம் நிறைந்த மகிழ்வோடு, காண இன்பம் தரும் தலைவியிரது அழகால் காதலின்பம் பெருகவே, இறுகப் பிடித்து அவனது. உரிமை யுணர்வை வீரத்துடன் பாராட்டி மகிழ்ந்தான். உரிமை உணர்வால் செய்த அவன் செயல் அன்பின் வெளிப்பாடாக மலர்ந்தது. யாவர்க்கும் புலப்படாவண்ணம், தன் கரும்பினிய வாழ் வரசியின் முன் கையினை துணிச்சலோடு இறுகப் பிடித்த செயல், மிக நுட்பமாய தலைவி உள்ளத்தின் அடித்தளத்தில், நாணமாதிய நாற்படைகள் காத்து நிற்க, தன் மீது பதுங்கிக் கொண்டிருந்த காதல் விருப்பத்தை பொங்கியெழுமாறும், காதலுணர்ச்சி விழிப்படையுமாறும் வெளிப்படுத்தியது ஈங்கு நினைவு கூரற்பாலது. தலைவனது இறுகப் பிடித்த செயலின்பத்தை உழுவலன்பின் விளையாட்டில் பண்டு விளைந்த காதல் வழி கபிலர் உணர்த்தி, காதலின்பம் பாட்டில் பொங்கியெழுமாறும் செய்து விடுகிருர். நீரினைத் தலைவி வார்த்தபோது, தலைவன் நீரினையாயுண்டான்! இல்லை. காதல் தாகத்தால் தலைவியின் முன்கையை இறுகப் பிடித்ததும், அவள் செவ்வி குலையா கரும்பை யொத்தாள். அதனுல் காதலின்பம் ஊற இறுகப் பிடித்த செயல், தலைவி பொருட்டுத் தலைவன் இல்வாழ்வு விரும்புவதைப் புலப்படுத்தி, பின்னர் நிகழவிருக்கும் மணவணியில தலைவன் தலைவியின் கைத்தலம் பற்றும் காட்சியினைக் குறிப்பால் கபிலர் உணர்த்தியது நோக்கற்பாலது. மற்றும் குறும்பு விளையாட்டாலெழுந்த இன்ப மகிழ்ச்சியினை அல்லல் நீத்த உவகையாகக் கபிலர் காட்டியுள்ள திறம் சால்பும் வியப்புமுடைத்து தலைவன் தலைவியின் கரத்தை ஒயிலாகப் பிடித்து காதல் கனல் தன்னை மூட்டி மீட்டியவுடன், விரல் மேவிய வீணையிலே நாதம் எழுப்புவது போல்,

கற்பு நிலை மேவும் காதல் வீணைச் செல்வம் குரல் குழம்பி எழுந்தது. அதன்வழி, தலைவியின் விருப்பு நிலை விளக்கமாய கற்பினை வியந்து, லாகவமாக தலைவன் தன் பிடியை விட்டு விட்ட செயல் அறநெறி பிறழாததுமான அவனது பொறுப்பினை நன்கு உணர்ந்தவனுகிருனென்பது இனிது அறியப்படும். வாழ்க்கைத் துணையாகத் தலைவியைக் கொள்வானுதலால், கொல்வான் போன்ற நோக்கில் காதல் நோயினை அவளது உள்ளத்தைத தாக்கும் உரனுல் வளர்த்து, அவளது நெஞ்சகத்தே. தலைவன். பாசத் திரையினை விரித்திட்டான்

தலைவன் தலைவியின் இல்லின் கண் வந்து நீரினைக் கேட்ட திறம் அறிவின்பாற்பட்டது, தலைவியின் இல்லம் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்கும் அன்புசேர் இருக்கையென்பது முன்னரே தெரிந்துதான், தலைவன் 'உண்ணு நீர்வேட்டேனென'ச் சென்ருன். நீரின்றமையாது உலகமாதலின், உலகின்கண் வாழும் உயிர்கட்கும் நீருக்கும் எத்தகைய தொடர்புளதோ, அத்தகைய தொடர்பு தனக்கும் தன் தலைவிக்கு முளதென்பதைக் காட்டவே அவ்வாறு நீரினைக் கேட்டானென்க. மற்றும் தலைவனது மாருத காதல் தலைவியிடத்தே படிந்த வேட்கையாக யிருந்த யியல்பிற்ருதலின் அவன் நீர் வேண்டினனென்க. மற்றும் பொதுவாகப் பெண்டிர் பெரும்பாலோர்க்கு நெகிழுந் தன்மை அளவு கடந்தது. நெகிழுந் தன்மையுடைய நீரினையும் அன்னவர்களையே கொண்டு வரச் சொன்னல் அவர்களது உள்ள நிலையை சொற்களால் எடுத்துக் காட்டவும் இயலுமோ? அவர்களது உள்ளம் பற்றிய மகிழ்ச்சி நிலையை இயம்பவும் ஒல்லுமோ? தலைவியின் காதலின்பத்தில் ஒன்றிப் போய்விட்ட தலைவனின் நீர் வேட்கையும் பறந்துபோகவே, தலைவன் அவளது உணர்ச்சியையும் அறிவையும் பருகினன். மீண்டும் தலைவியைத் தன் கண் பனி சோர, இன்பக் கண்ணீர்க் கடலில், வேண்டிய நீரினை முகந்து கொண்டு செல்லும்படி ஒரு முறை, அழுந்தக் காணும் அகக் காட்சி வயங்க, நோக்கினன். ஈண்டு இளமையாய தலைவன் ஒரு குறிக்கோள் கொண்டு தன் தலைவியாகிய இன்பத்தை அழைக்க, அவ்வின்பம் தூய்மை உணர்வோடு காதலை வரவேற்கும் அழகு நிலையை உணர்த்தும் மென்மை நோக்கற்பாலது. மற்றும் 'வேட்டார்க்கினி தாயினல்லது நீர்க்கினிதென் றுண்பவோ நீருண்பர்' என்ற குறிஞ்சிக்கலி (26) அடிகளைச் சற்றே நினைவுக்குககொண்டுவந்து, நுவலப்படும் குறிப்பினை உணரற்பாற்று.

இனிமை சான்ற தலைவியின் அன்னையாரினியல்பை இனி காண்குவம். தலைவியின் அன்னை, பல்வேறு வாழ்க்கைத் துறைகளில் பயன்மிகக் கண்ட மெய்யுணர்வும் உணர்வாற்றலுமுடையாள்: அன்பே உயிரென்பதும் அன்போடியைந்த உயிரையாண்டும் நிலைபெறச் செய்வது கற்பென்பதையும் நன்குணர்ந்த ஒழுக்க நல்லாள்: 'உற்றூர்க்குரியர் பொற்றெடி மகளிர்' எனும் உலக இயலை உணர்ந்த குண நலனுடையாள்: விருந்து போற்றும் விழுமியகோட்பாடும் தமிழ் நாகரிகப் பண்பாடுடையாள்: அழகு மிகு இரக்கங்கொண்ட அருளுணர்ச்சியுமுடையாள். 'நீர்விக்கினன்' எனத் **தலைவி** கூறவும், மன அதிர்வுடன் சென்ற அவளது அன்னை, அங்கிருக்கும் பட்டி பால் இரக்கமீதூர்ந்து, அவனது முதுகைப் பன்முறை மன எழுச்சியோடு தடவிக் கொண்டிருந்த காட்சி ஓவியம் போல் காட்டப்பட்டுள்ளது. மற்றும் அவனது துயரத்தைப் போக்கும் துணிவுகொண்டு முயன்ற செயலும், அவனைப் பாராட்டும் தகைமையும், மிக்கதோர் இன்பம் பயப்பதோடமையாது அன்னையின் அன்பின் திறத்தையும். வளர்ப்பு முறையினையும் தெளியவைக்கும் பான்மையது. தண்ணீர் தவிப்புடைய தலைவன், தலைவியின் முன்கையினைப் பற்றியதும், தலைவி எழுப்பிய ஒலி அன்னையின் செவியில் புகவே, அது அவளுக்கு தலைவியின் காதலைப்பற்றிய செவியுணவு ஓரளவு கிடைக்கப் பெற்றதாகக் கபிலர் அமைத்த திறன் வியத்தற்குரியது. மற்றும் தலைவியைப் பார்த்த ஞான்று அவள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் சிலை போன்று நின்றதையும் அன்னையின் மனக் கண்முன் காட்டி, அவள் தன்னையுமறியாமல், தலைவியிடையேகளவொழுக்கம்நிகழ்ந்ததை அவள் சூறிப்பால் அறிந்துணரும்படி, கபிலர், சுற்று நிலைச் சூழல் வழி செய்து விடுகிறார், இதன் வழி, தம்மகளிரது களவொழுக்கத்தை நேர்முகத்தால் தமக்குத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளாதும், உள்ளக் கருத்தினை வெளிப்படையாக உரையாது நிற்கும் தன் மகளின் பெண்மை அடக்கத்தை நுண்ணிதின் உணர்ந்து அவளிடம் களங்கங் காணது, பேறுடன் சேரவேண்டிய இடத்திற்குத் தம் மகள் சேர்ந்தாளெனப் பரிவுடன் நடந்து கொள்ளும் பான்மையால், அன்னை உலகியலை அறியாதவளல்ல என மறைமுகத்தால் தோன்றுமாறு கபிலர் விளங்கவைத்த நயம் அறிந்து இன்புறற்பாலது. அறிவு நிலை விளங்க, நற்குணங்கள் நிறைந்தமைந்த அன்னையின், சான்றுண்மையினைக் கபிலர் காட்டி, தன்னலப் பற்றிலாப் பண்புடையாளர், அருள் சுரந்து பிறர் நலனுக்கு உரிமையாகவும், உண்மையாகவும், ஏதுநடை கடைப்பிடித்து உழைக்கும் இயல்

பினை அறிவித்து, தலைவியின் அன்னையார் போன்ற பண்புடையார் மாட்டு உலகமுண்டென்பதைச் சுட்டியுமுள்ளார்.

பெண்மை உய்ய, காதல் வளர்ச்சியின் கரு சிறப்பதற்கு காரணமாயிருப்பவள் தோழி. அவளே, களவொழுக்கத்தில், நேர்ந்த வழி கூடித் தீர்ந்த வழித்துறக்கும், திறத்ததாய பொய்யொழுக்கத்தை விலக்கி, தலைவனும் தலைவியும் பிரியாது இருவயினொத்து காதலறத்து வாழ்வில் மன்னுதல் பொருட்டு உற்றுழி யுதவும் பண்புடையாள்: காதல், உயிரின்கண் உண்டாகி வளரும் இயல்புடையதால், அதனை வளரும்படிச் செய்து, காட்டாருகப் பெருக விடாது, மணங்கோடலை வற்புறுத்தி மண முடிக்கும் குறிக்கோளினை யுடையவள். இத்தகைய பண்போவியத்தை தலைவி தன் தோழி பால்கண்டதை நாமும், பண்பில் தளராத அத்தோழியின் இதயத்தில் காணுமாறு கபிலர் செய்து விடுகிருர்: ஈண்டு தலைவிக்கு உயிர், தோழி யாதலையும், தோழி. தலைவியின் மன மாதலையும் காணவைத்தார். தோழி. தன்பால் தலைவி உள்ளத்துக் காதலை விள்ளத்துணிந்த ஞான்று, தலைவி எதனையோ மறைக்கின்ருளென்றுணருமாறு. குறிஞ்சிப் புலவர் செய்த வகைமுறை இறும்பூது பயக்கும் பான்மையது. பட்டி ஏன் நீர்வார்க்கு முன்னர் முன்கையினைப் பற்றி நலிந்தான்? அவ்விதம் பற்றுங்காலை, எக்காரணத்தால் அன்னையைத் தலைவி அழைத்தாள்? அன்னை வந்தது வருமுன் 'நீர்விக்கி வருந்தினுன்' என எதற்காக தலைவி அவ்வாறு கூறினள்? ஏன் தலைவன் கொல்வானைப்போல் கடைக்கண்ணுல் நோக்கினுன்? ஏன் நகைக் கூட்டஞ் செய்தான்? என்றது போன்ற கேள்விகளை தோழியின் உள்ளத்திலே கபிலர் எழுப்பிவிட்டார். இனி தலைவன் தலைவியை மறக்கப்போவதுமில்லை, தலைவியும் தலைவனைக் கூடாமல் இருக்கப்போவதுமில்லை, தலைவனையன்றி பிறர் விடுத்தற்காகாது பிணித்தது தலைவியின் நெஞ்சு, எனத் தோழி தனக்குளேதேறி மணவினை முடிக்கும் அவளது திண்மை செயலையும் உலகியலறிவினையும் கபிலர் கூருமல் உணர்த்திவிட்டார். மற்றும் பழைய உறவை உள்ளம் நிறைந்த மகிழ்வோடு. மகிழ்ச்சியைப் பெருக்கும் வழியில், தலைவி தன் தோழியை மணவினை முடிக்க முற்படுவதில் ஆவன செய்யுமாறு சுட்டாமல் சுட்டி, நாகரீகப் பண்புடன் கூறும் திறனையும், யாப்புறத்தும் அமைதியில் விளங்க வைத்தார்.

இக்கலிப்பாவின் கண், காதலன்பின் ஆர்வ வளர்ச்சியில் தலையாய அறமாகிய விருந்தோம்பலை இடமுறுப்படி மிக நுட்

பமாகப் பின்னிக் காட்டி, விருந்தோம்பும் வகையில் கபிலர் ஒரு விருந்து அல்லது புதுமையினைத் தெளியவைத்தார். விருந்தென்னும் வகையில் யாதொரு வேறுபாடும் மாறுபாடும் பண்டைக் காலத்து இல்லத்து மகளிர்க்கில்லை யென்பது, மண நிகழாப் பருவ மங்கை, விடாய்க்கு நீரென இல்லின்கண் வந்த கட்டிளைஞருக்கு அன்பொடு நீர் வழங்கிய நிகழ்ச்சி வழி, நன்கெடுத்து விளக்கப் படுதல் காண்க,

விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்

★ ★ ★

புகா அக்காலை புக்கெதிர்ப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்

என்ற செந்நாப் பழகிவரும் வரிகளான், வழுவின்றி விருந்தோம்பல் அஞ்ஞான்று பெண்டிற்கு இயல்பாய கருத்தாயிற்றெனை உணர்ந்து கொள்ளப்படும்.

கபிலர் சுவையாய பகுதிகளை கருத்துக்கேற்ப வேண்டிய அளவிற்றாக, பன்னயங் கெழுமிய கலிப்பாவில் விழுப்பம் தோன்ற அருளியிருப்பது நோக்கற்பாலது. நோதக்க செய்யும் சிறுபட்டி யென்றதினன், காதலிருவரும் காதலுறவு ஏற்படக்கூடிய ஒரு திணைக்குரியராவரென்பதும், முன்னிகழ்ந்த அவர்களது காதல் விளையாட்டு இன்ப விரிவாகப் பின்னிகழும் வாழ்க்கைக்கு வழி காட்டியாக அமைந்ததென்பதும் புலப்படுத்தப்பட்டது. முன்பே தலைவியிடம் தலைவன் பழகியிருக்கும் காரணத்தால், அவளது முன் கையினை இறுகப் பிடித்ததும் அதுபோது அவள் அஞ்சி அலறுவதும் செயலற்று நிற்பதும் இயற்கையில் நிகழக்கூடியவை. கடைக் கண்ணாற் கொல்வான் போல் நோக்கி, நகைக் கூட்டஞ் செய்த இன்பம் அறத்தொடு நிற்றலின், நெறிபட வாழுமின்பத்திற்கு அடிகோலியதும், அதனன் தலைவியாது கற்புச் சிறப்பு நிலைக்க வாய்ப்பினையுடைய தென்பதும் குறிப்பானுணர்த்தப் பட்டது அறியப்படும். மனதால் விரும்பி உணர்வில் ஒன்று பட்டதால், தலைவனது உருவும் திருவும் தலைவியின் உள்ளத்தில் அழியாத ஓவியமாக அமையவே, அவனது கொல்வான் போன்ற நோக்கில் அன்பு வழிவதையும் அவ்வன்பு தன் பாலே வந்து பாய்வதையும் உணர்ந்தாளென்பது புலப்படுத்தப்பட்டது கண்ணிற்குக் கொலைத் தொழில் கற்பித்த கபிலர், தலைவன்

தன் கண்களால் தலைவியின் கண்களைக் கவ்விக்கொள்ள, அக் கவ்வுதலினின்றும் தலைவி, தன்னை காக்க முயன்றதினையும் ஓராங்கு உண்மையியல் வழாது கவினுற அறிய வைத்தார். கொல்வான் போன்ற நோக்கு கண்ணைத் துளைத்து அவளது நெஞ்சத்தை அறியக் காணும் நோக்கரிய காதல் மனநோக்கன்றி பிறிதல்ல.

தலைவன் நகைக் கூட்டஞ்செய்தான் என்ற கருத்தில், தலைவன், தலைவியின் முகத்தில் முகிழ்க்கும் மலர்ச்சி அழகில், தெய்வ ஒளி வீசுவதைக் கண்டு, மீண்டும் கூடி, தலைவி மாட்டுத்தாழச் செய்யும் கடவுட் டன்மை நிறைந்த அன்பால் மகிழ்வுறும் எண்ணத்தைக் காட்டிற்று எனக் கபிலர் குறிப்பாராயினர். எதிர்பாராத நிலையில், தேயா விழுப்புகழ்த் தெய்வம் கூட்டநேர்ந்த நிகழ்ச்சியினை நகைக் கூட்டத்தில் காணவைத்து, காதலரிடையே அரும்பும் காதல் மெய்யுணர் வியக்கந்தரும் தெய்வ நீர்மை சான்றதெனத் தெளிவுபடுத்தி, கபிலர், தெய்வத் தொடர்பை விளங்கச் செய்து காப்பது கவிதையின் நோக்கமென்பதை புலப் படுத்தியது அறிவிற்கு விருந்தாகுமென்க. தெய்வ வாழ்த்தும், வாலறிவுத் தொழுகையும் காதலின்பப் பொருள் குறித்து உலகியலைப் பற்றி வருமென்பது தமிழ் நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழியாகும்.

காதலின்பப் பொருளை சிறப்பிக்கும் கபிலர் அதனைத் தொடர்பு பொருந்த சிறப்பித்தல் நியதிகொண்டு தலைவனது நகைப்பில், நகைப் பூங் கொத்து விளங்குவதை உணர்த்தவேண்டி, உண்மைக் காதல் உயிரினைப் பற்றும் பெற்றியினையும் அஃது எவ்வாறு இல்லறத்தின் தொடக்கத்தில் அரும்பி, மொட்டுத் தூய்மையொடு விரைவில் போதாகி மலர்ந்தும் காயாகிக் கனிந்தும், பின் கசிந்து பற்றற்ற அருள் நிலையில் நிற்குமென்பதைக் கபிலர் தெளிவித்தருள்வாராயினர். நகைப் பூங் கொத்தாகிய சிரிப்பின் தொகுதியில், கபிலர் உணர்வில் அரும்பு கட்டி உள்ளத்தின் மலராக எழில் கொண்ட செய்யுளினை சொல்லில் தொடுத்து வைத்த செவ்வி மாணொளி விளக்கங்கொள்ளும் தகுதியுடைத்தென்பது தெளிவு.

இக் கலிப்பாவில், கபிலர், காமமிக்க கழிபடர்கிளவியின்றி காதலின் அமைதியினையே துணிந்து விளங்க வைத்தது சற்றும் மறக்கொணாதது. மற்றும் தலைவன், தலைவியின் நிறைத் தாழினைப் பறித்ததும் நிறையினை அழித்ததுமாய அடாத செய்தியினைக் கபிலர் கூறினாரில்லை. ஈண்டு தலைவி நாணிறந்து

பெருகுங் காதலால் அகத்தழிய உருகும் நிலையினையும், அழுங் கல் நெஞ்சமொடு படர் மெலிந்திரங்கலையும் காணுமாறில்லை. தலைவியின் காதலின்பம் பொங்கி யெழுந்ததுமில்லை. கொந் தளிப்பு கொண்டதுமில்லை. பெண்மை உடைக்கும் படைகொண்டு இரவிற் புகும் மாயக் கள்வன் போலல்லாது, பகலில் விருந் துண்ணும் வேளையில் யாவரும் இல்லில் இருக்கும் அமயத்தில் தலைவன் தன் தலைவியைக் காணவந்தது அவனது கள்ளமற்ற பிள்ளைத் தன்மையினைக் காட்டா நிற்கும். மற்றும் தலைவியின் அன்னை முனிவுற, யாதும் கவர்ந்தானிலை; எழில் நலம் அழியப் பொல்லாததும் செய்தானுமில்லை. இந்நிலையில், கவிதையில், நாண்முகங்காட்டும் மென்னீரராகிய கற்பினலல்லார், தன் தலை வனை 'கள்வன்' எனக்கூறல் நெறியாகாது; தகாதென்பதும் வெளிப்படை. இஃது அன்பின் அகத்திணை யொழுக்கத்திற்கு முற்றிலும் புறம்பானது. தலைவனுக்கு இழிதகைமை நேரும்படி சொல்லா நலத்தது தலைவியின் சால்பாதலின், தலைவனை வாய் காவாது எள்ளி 'கள்வன்' என பால்போல் தீஞ்சொல்லாள் கூற ஒருப்படாது களவன்' என திருத்தமாய் மொழிந்தாளென்க. கொடியது செய்து எவருங்காணாது பறிக்கும் இழிதகைமையினைக் குறிக்கும் 'கள்வன்' என்ற பாடம் பொருந்துமாறில்லை. கற்றறிந்த நாவினூர் சொல்லாரென்க. நாணித் தலைகுனியச் செய்ய, எள்ளி நகையாடும் மனப் போக்குடன் இழிதகைமை சொல்லாமை பெருந்தகைமையாகும். வள்ளுவர் போர்க்களத்து வீரரையும், ஊரவைக் களத்து வீரரையும் உழவர் என்றார் போன்று, அன்னாரைத் தாவா நல்லிசைத் தண்டமிழ்ப் புலவராய கபிலர், இயற்கை வினைத் திறனோடு. 'களவர்' என்றே வழங்கினரென்க. இன்பம் துளிர்க்கும் 'களவன்' என்ற சொல் இக்கலிப்பாவினைக் கலை யாக்கிச் சுவை பயக்கும் அற்புதச் செயலை ஓராது, 'கள்வன்' என வழங்குதல் பாட்டின் உயிர்க்கே உலை வைப்பதாகுமென்க. 'களவன் மகன்' என்பது நெறிபட வழங்கலுறும் பல பொரு ளொரு தொடர்; இஃது அகமும் புறமும் பற்றியது. 'களவன்' என்ற சொல் வீரன், அறிவன் என்பதைக் குறிக்கும். தலைவன், தன் தலைவியது நெஞ்சத்தைக் காதல் விளையாட்டுக் களமாகப் பண்டு தொட்டே கொண்டாண்டதைக் கருதி, தலைவி 'களவன்' என்றுளென்க ஆடவருள் சிறந்தவன் எனக் குறிக்கும் 'மகன்' என்ற கிளவி, கணவன் என்ற பொருள் பயத்தலை 'நினக்கிவன் மகனாய்த் தோன்றியதூஉம்' என்ற மணிமேகலை யடியால் நன்கு விளங்கப்படும். எனவே, 'யாது நேரினும் எனக்குத் தக்க வீரனாகிய கணவன் இக் 'களவன் மகன்' எனத் தலைவி, பிரிவில் உணர்ச்சியோடு பருவக் குமரித் தமிழால் தன்னெஞ்சப்

பொருளை குறிப்பாகத் தோழிக்கு விளித்துக்காட்டி, கற்பார் மனத்திலும் ஆராய்ச்சியினைத் தோற்றுவிக்கும் பான்மை நோக்கற்பாலது. ஈண்டு தலைவியரது காதல் வளர்ச்சிக்கேற்றதாகிய கருத்துணவைக் கபிலர் படைத்து, தலைவியின் எண்ண வளர்ச்சியினை, இக்கலிப்பாவில் சொற்பொருளறிவும் நடையறிவும் விளங்குமாறு இயக்கங் கொள்ள வைத்த மாட்சி காண்டற்குரியது.

உணர்வினில் வல்லவராகிய கபிலர் இக்கலிப்பாவில் அறிவினையும், அறத்தினையும் அழகினையும் அணி பெறச் செய்துள்ளார். சொற்களின் அமைதியின் வேகத்திற்கு, கறையும் குறையுமில்லாது மெருகு கொடுத்து, கருத்துக்கு வன்மை கொடுக்கும் யாப்பினமைதியொடு எஞ்ஞான்றும் வளம் கொழிக்கும் இலக்கிய உரிமைச் சுவையினையும் பெருக வைத்துள்ளார். நுண் பொருளமைந்த இப் பண்புடைக் கவிதையில், எளிமையும் இனிமையுங் கொண்டு, என்றும் ஒரு படித்தாய பேசுந்தமிழ்ச் சொற்கள் வழி, கபிலர், அறிவு நிலையினையும் உணர்வு நிலையினையும், கிளர்ந்தெழுந்து, பின் ஒன்றிப் போகுமாறு செய்து, நன்னெறிப் படுத்தும் மெய்ம்மையை, பெரு விளக்கங்களோடு, உள்ளத்தே செவ்விதாய், பகுத்துணர்ந்து காணுமாறு தெளிய வைத்துள்ளாரென்பது நன்கு துணியப்படும். இதனுள், இக்கவிதையில் வரும் தலைவன், தலைவி தலைவியரது அன்னை, தோழி முதலியோர்களது சிறப்பியல்புகளை வெகு துல்லியமாக உணர்ந்து கொள்ள வாய்ப்புளது மற்றும் இதன் கண் உருவாக்கப்பட்ட பாத்திரங்கள் நிலைபெற்று நிற்றற்கு, அவைகளை எந்தெந்த அளவோடு நிறுத்தி, எவ்வளவு தூரம், கதைக் போக்கினிலே உரையாடல் வழி, கொண்டு போக வேண்டுமென்ற நியதியினைக் கபிலர் முன் கூட்டியே நிர்ணயித்து, அவைகள், பல்லாற்றானும் குணச்சித்திரங்களாக வயங்கி, இறவாத மங்கல நிலையினை எய்தும்படிப் படைத்த திறன், உள்ளுதோறும் ஆராமை பயப்பதாய்த் திகழ்தல் காண்க.

சொல் கொண்டு இயங்கும் இப்பாவில், சுருங்கச் சொல்லல், நவின்றோர்க்கினிமை, ஆழமுடைத்தாதல் ஆகிய சொற்கள் ஈண்டு கண்டுணரற்பாலன. படிப் போருள்ளத்தை ஈர்க்கும் வகையில், நுவலப்படும் பொருள், திட்பமும் ஆழமும் கொண்டு திகழ, ஓசை, எழுத்து, சொல், அசை, சீர், அடி முதலாய வரம்புகளுக்குட்பட்டு. தெள்ளுற்ற தீந்தமிழ்ப் புலவராய கபிலர், சொற்செட்டை உணர்வெழிலுடன் கையாளும் திறம் கலிப்பாவினெழிலை எழச் செய்துள்ளது. செவிப் புலனின் துணை கொண்டும் இப் பாவின் நயத்தை நுகர்ந்து இன்பமுற, பாவினிலே படைக்கப் பட்டிருக்கும் பாத்திரங்களைக் குறிக்கும் 'அன்னை,' 'என்னை,' 'தன்னை' என்றது போன்ற, உளம் பதித்து ஆளும் சின்னஞ்

சிறு சொற்களின் ஒலிகள் மீண்டும் மீண்டும், மெய்ப்பாட்டுச் சுவையினை விளக்கும் பல பொருட்டோற்றங்களோடு, இணைந்து ஒலித்து வருமாறு அருமையாகக் கபிலர் அமைத்து உரைத்துச் செல்லும் ஒட்பமும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். 'என்னை' என்றது தலைவியையும், 'தன்னை' என்பது (தன் + ஐ) தன் தலைவனாகிய பட்டியையும் குறிக்கும். செவிப் புலனிடம் பழகிவரும் இத்தகைய எளிய சொற்களின் ஒலிகள், மனித இதயம் உருகுமாறு, இப்பாட்டினிலே, உயிர் வாழ்வு பெற்று கருத்தின்பக் கலையொளியுடன் ஓரினிய நயப்பாடுந் தொடர்ப்பாடுங் கொண்டுள்ளன வென்பது ஈண்டு கருதற்பாற்று.

பழுத்தபலாவினை உரித்துத் தேன் சுளைகளை எடுப்பது போன்ற அறிவு முதிர்வும் உழைப்பும் இத்தகையப் பாடல்களைப் படிக்குந்தோறும் இன்றியமையாத தொன்றாய் வேண்டப்படினும், அவ்வகைகளில் நம்மனம் பழகி வரவே, பழக்கமெனும் பயிற்சி, முதிர்ச்சி யெய்துங்கால், பாடலின் பொருள், அளவிறந்த சிறந்த அறிவினையும் இன்பத்தையும் எளிதே நல்கும். அறிவும் உணர்வும் சுடர்ந்தின்புறும் வகையில், சொற் பொருணுட்பங்களும், ஓசை யினிமையும் செவ்வியுமொருங்கே வாய்ந்த தமிழ் மொழியின் திருவருளால் விளைந்த சங்கக் கவிதைகளை ஆர்வத்துடன் ஊன்றிப் பயின்றும் திறனறிந்தும் கற்றிலையேல், எட்டாத பழம் புளிக்கும் என்ற நரியின் மனப்பான்மை எழுதலியல்பே. வாழ்க்கை உரம் பெறுமாறு பெருநலன் விளைவிக்கும் சங்க நூற்களின் ஊற்றமாய கருத்துக்களையும், சொற் பொருட்டிறங்களையும். நன்னர் விளங்க, சங்க நூற்பேற்றினைக் கருதி, அகம் புறமென்னும் சங்க நூற் கல்வி முறை செவ்வன் பரவ வேண்டும். தேரின், மங்காத சங்கத் தமிழை விட, வாழ்வியல் முறைக்கு விழு நிதி வேறில்லை, உலக நாடகக் கவியாம் செகப்பிரியர் வேண்டுமா அல்லது இந்தியப் பேரரசு வேண்டுமா எனத் தன்னை வினவினால், வேண்டியார்க்கு வேண்டியவற்றை வேண்டியாங்களிக்கும் இந்தியப் பேரரசு ஓர் நாள் விலகினும் விலகும் அதனைக் கைவிட ஓரோவழி உடன் படுவேன். ஆனால் எந்நாளும் எம்மோடிருக்கும் செகப்பிரியரைக் கைவிட எட்டுணையும் மன மொல்லேன். என்ற ஆங்கில ஆசிரியரான கார்லைலின் மொழிப்பற்றும், அறிவாற்றலுடைய இலக்கிய உணர்வும் தமிழர் பால் இடையறுது ஒளிர வேண்டும்.

* Will you give up your Indian Empire or your Shakespeare? Indian Empire or no Indian Empire, we cannot do without Shakespeare. Indian Empire will go at any rate some day but this Shakespeare does not go; he lasts for ever with us; we cannot give up our Shakespeare' (The Hero as Poet - Carlyle)

இரண்டு தமிழ் விகுதிகளின் தோற்றம்.

திரு. இரா. கோதண்டராமன்,
எம். ஏ. (தமிழ்), எம். ஏ. (மொழியியல்)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பழந்தமிழ் இலக்கியங்களில் மர், மார் என இரண்டு விகுதிகள் பயின்று வழங்குகின்றன. இவற்றுள் மர் என்னும் விகுதி வினையாலணையும் பெயரின் கண்ணும், சில எண்ணுப் பெயர்களின் கண்ணும் தோன்றி நடைபெற்றியல்கின்றது.

பொன்னுரை காண்மரும் கலிங்கம் பகர்நரும்
செம்புநிறை கொண்மரும் வம்புநிறை முடிநரும்
(பத்துப்பாட்டு. 6 513 & 514)
உண்மரும் தின்மரும் வரைகோ ளறியாது
(பதிற்றுப்பத்து 24-18)
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவிய
(பத்துப் பாட்டு 4-415)
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து
(பதிற்றுப்பத்து. 5-ம் பத்தின் பதிகம்)

மார் என்னும் விகுதி பெயரின்கண் தோன்றிப் பன்மைப் பொருண்மையையும், வினையின்கண் தோன்றி ஒரோ வழி முற்றுப் பொருண்மையையும், பெருவாரியாக நோக்கம் கருதிய எச்சப்பொருண்மையையும் உணர்த்தி நிற்கின்றது.

தோழிமாரும் யானும் புலம்ப (அகம் 15-9)
வாள்தக வைகலும் உழக்கும்
மாட்சியவர் இவர்தன் ஐமாரே (புறம் 342-15)
காமம் படரட வருந்திய
நோய்மலி வருத்தம் காணன்மார் எமரே (நற்றிணை 64)
செழுநகர் நல்விருந்து அயர்மார், ஏமுற
விழுநிதி எளிதினின் எய்துக தில்ல (அகம். 205-13)
பல்லான் பொதுவர் கதழ்விடை கோட்காண்மார்
நல்லவர் கொண்டார் மிடை (கலித்தொகை, 103.5)

மேல் எடுத்துக்காட்டுக்களில் காணன்மார் முற்றுப் பொருண்மையையும் அயர்மார் மற்றும் காண்மார் ஆகியவை எச்சப் பொருண்மையையும் உணர்த்தி நிற்கின்றன. [1]

வெவ்வேறு நிலையில் நின்று பொருள் உணர்த்திச் செல்லும் மர், மார் இவ் இரு விகுதிகளின் தோற்றத்தினைச் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைவடிவங்களை அடுத்து ஆன் ஆர் ஆகிய இரண்டு வினைமுற்று ஈறுகளும் முறையே ஓன். ஓர் எனத்திரிந்தமைந்து * செய்யுமோன் * செய்யுமோர் என்ற வாய்ப்பாட்டு வினையாலணையும் பெயர்களாக வழங்குதல் காணப் படுகின்றது.

உணரும் + ஓர் (தொல். எழுத்து. 194)
தெரியும் + ஓர் (தொல். சொல். வே ம. 17)
தெளியும் + ஓர் (தொல். சொல். விளி 35)
நிற்கும் + ஓர் (புறம். 297 – 10)
உடலும் + ஓர் (அகம். 316. – 17)
காணும் + ஓர் (பதிற்றுப்பத்து. 33 – 5)
வேயும் + ஓர் (பரிபாடல் xii 11, 16)
அறியும் + ஓன் (புறம் 137 – 4)
கொய்யும் + ஓன் (புறம். 252 – 3)

மேற்குறித்த எடுத்துக் காட்டுக்களினின்றும் ஓர் உண்மை அறியப்படும். செய்யும் என்னும் வாய்பாட்டு வினைவடிவங்களை அடுத்து வினைமுற்று ஈறுகள் அமைந்து வினைமுற்றாகவும். வினையாலணையும் பெயராகவும் பழந்தமிழில் வழங்கியமை புலப் படுகிறது, இதன் அடிப்படையில் * செய்யும் + ஆர் (செய்யுமார்) என்ற ஒருவாய்பாட்டு வினைமுற்றை ஆய்வுக்காக வேண்டி அமைத்துக் கொள்ளலாம்.

---

1 இக்கட்டுரையில் காண்மார் என்ற வினைமுற்றுக்கு நிக ரான எதிர்மறை வினைமுற்றாகக் காணன்மார் கொள்ளப்பட்டிருக் கின்றது. வினைமுற்றின் அமைப்பைக்கொண்டு நோக்கும்போது மார் ஈற்று வினைச் சொற்களை வினைமுற்றுக்களாகக் கொள்ளுதல் பொருந்தாது. எனினும் காணன்மார் (காண் + அல் + மார்) என்ற வடிவத்தில், இயல்பான எதிர்மறை வினைமுற்றில் காணப் படுவதுபோலவே —அல்— என்னும் எதிர் மறைக்கிளவி காணப் படுவதால், அவ்வினை வடித்தை இங்கு எதிர்மறை வினைமுற்றாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தொல்காப்பியர் காலத்தில் செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெஞ்சு கிளவியில் ஒரோவழி ஈற்று மிசை உகரம் (மெய் யொடும்) கெடும் என்ற நிலை இருந்தது.[1] அந்நிலை செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்களிலும் காணப்பட்டது என்பதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுக்கள் தெளிவுபடுத்தும்.

காமம் செப்பாது கண்டது மொழிமோ (குறுந்தொகை 2)
தமரின் தீரான் என்மோ (குறுந்தொகை. 392-6)
தந்தனை சென்மோ (குறுந்தொகை 236-2)
இன்று வரல் உரைமோ (அகம் 34-15)
பிரியலன் தெளிமே (குறுந்தொகை. 273-8.)
நீ வேட்டது செய்ம்மே (புறம். 46-8)

மேற்குறித்த மொழிமோ, என்மோ, சென்மோ, உரைமோ, தெளிமே, செய்ம்மே ஆகிய வினைவடிவங்களை முறையே

* மொழியும் + ஒ, * என்னும் + ஒ, * செல்லும் + ஒ,
* உரையும் + ஒ, * தெளியும் + ஏ, * செய்யும் + ஏ

என வரலாற்று அடிப்படையில் ஆராயலாம். வினையடி + மோ என்ற அமைப்பு தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே வழக்கில் இருந்தது என்பதற்கு, அவர் இடையியலில் குறிக்கும் மோ[2] என்னும் முன்னிலை அசைச் சொல்லேதக்க சான்றாக அமைகிறது. இவ்விடைச் சொல்லின் தோற்றத்தை வினையடி + உம் + ஒ > வினையடி + ம் + ஓ > வினையடி + மோ என்ற நிலைகளில் ஆராயலாம் மோ என்ற முன்னிலை அசைச் சொல் செய்யும்

---

1 செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடும் கெடுமே ஈற்றுமிசை உகரம்
அவ்விடன் அறிதல் என்மனார் புலவர்
(தொல், சொல். (சேனா.) வினை 41

2 மியா இக மோமதி இகும்சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்.
(தொல். சொல் (சேனா). இடை. 26)

என்னும் வினைவடிவத்தில் நிகழ்ந்த மாற்றத்தால் தற்செயலாகத் தோன்றியமைந்த ஒன்று என்பது தெளிவாகின்றது, [1]

செய்யும் என்ற வாய்பாட்டு வடிவத்தில், ஈற்று மிசை உகரம் (மெய்யொடும்) கெட எஞ்சி நிற்பவை வினையடியும், உம் என்ற காலக்கிளவியின் குறுகிய மகர ஒன்றுமாகும். இதனைப் பின்புலமாகக் கொண்டு * செய்யும் + ஆர் என்ற வாய்பாட்டு வினை முற்றுக்களைக் கீழ்வரும் நிலைகளில் அவற்றில் நிகழ்ந்த மாற்றங்களை ஆராயலாம்.

1) செய்+உம்+ஆர்	கொள்+உம்+ஆர்	செல்+உம்+ஆர்
2) செய்+ம்+ஆர்	கொள்+ம்+ஆர்	செல்+ம்+ஆர்
3) செய்+ம்—ஆர்	கொள்+ம்—ஆர்	செல்+ம்—ஆர்
4) செய்—மார்	கொள்—மார்	செல்—மார்
5) செய் (ம்) மார்	கொண்மார்[2]	சென்மார்[2]

இதே நிலைகள் அர் என்ற வினைமுற்று விகுதியை ஈறுகக் கொண்ட செய்யும் என்னும் வாய்பாட்டு வினைவடிவங்களுக்கும் ஒக்கும்,

1) காண்+உம்+அர்	கொள்+உம்+அர்
2) காண்+ம்+அர்	கொள்+ம்+அர்
3) காண்+ம்—அர்	கொள்+ம்—அர்
4) காண்—மர்	கொள்—மர்
5) காண்மர்	கொண்மர்[2]

1. மதி, மின், மியா ஆகிய இடைச் சொற்களும் இங்ஙனம் தோன்றி அமைந்திருக்கக் கூடுமோ என்பது ஆராயத்தக்கது.

2. லகர ளகரங்கள் மகரத்தின் முன்னர் னகர ணகரங்களாகத் திரிதல் புணரியலின்கண் இயல்பாக நிகழக்கூடிய ஒன்றுகும்.

உம் என்ற காலக்கிளவியின் மகர ஒற்று அதனை அடுத்து நின்ற வினைமுற்று விகுதியோடு புணர்ந்து நிற்க, வினைவடிவத்தின் அமைப்பு வினையடி+மர் / மார் என அமைந்து வினையடியைத் தெளிவாகப் பிரித்துக் காட்டியது. இதன் விளைவாக மர், மார் ஈறுகள் காலப் போக்கில் தனி விகுதிகளாகக் கொள்ளப்பட்டு, அவை நேரடியாக வினையடியின்கண் சேர்க்கப்பட்டன. இந்த மயக்கம் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னரே வழக்கில் தோன்றி நிலைத்துவிட்டது. மர், மார் என்ற வடிவங்கள் உம்+அர் / ஆர் என்ற இரண்டு இடைச் சொற்களின் திரிபு என்ற உண்மையும் தொல்காப்பியம் தோன்றுவதற்கு முன்பே மறக்கப்பட்டுவிட்டது.

பெருவாரியாகக் காணப்படாவிடினும், பகர வகரங்கள் ஊர்ந்த ஆன் ஈற்று வினைச்சொற்கள் சங்க இலக்கியங்களில் நோக்கம் கருதிய எச்சப் பொருண்மையை உணர்த்தி நிற்கின்றன.

புத்தியானை வந்தது காண்பான் யான்தங்கினேன்.
(கலித்தொகை. 927)

எல்லை வருவான் விடுதி (கலித்தொகை 113 - 13)

மலையாள மொழியிலும், பகர வகரங்கள் ஊர்ந்த ஆன் ஈற்று வினைச் சொற்கள் இவ் எச்சப் பொருண்மையை உணர்த்தி நிற்கின்றன. தொன்மை சான்ற மலையாள இலக்கியங்களில் னகர ணகர ஈறுகளைக் கொண்ட வினையடிகள், மகரம் ஊர்ந்த ஆன் விகுதியைக் கொண்டு மேற்படி எச்சப் பொருண்மையை உணர்த்தியனவாகத் தெரிகின்றது.[1] இங்கு குறிக்கப்படும் மகர ஒற்றை உம் என்ற காலக் கிளவியின் சிதைவாகக் கொண்டு, தமிழில் மார் ஈறும், மலையாளத்தில் மான் ஈறும் வினையடிகளின் கண் தோன்றி எச்சப்பொருண்மையை உணர்த்தி நின்றன எனக் கொள்ளலாம் இதற்கு முன்னோடியாகப் பகர வகரங்கள் ஊர்ந்த ஆன் ஈறு,வினையின்கண் தோன்றி எச்சப் பொருண்மையை உணர்த்தியது எனவும், பின்னர் மான் ஈறு மலையாளத்தின் கண்ணும், மார் ஈறு தமிழின் கண்ணும் தோன்றி இப்பொருண்மையை உணர்த்தத்தொடங்கின எனவும்கருதலாம்.

தோற்றத்தில் பகர வகரங்கள் ஊர்ந்த ஆன் ஈற்று வினைகளும், செய்யும் என்னும் வாய்பாட்டு வினைவடிவத்தை அடுத்து வந்த ஆர் ஈற்று வினைகளும் எதிர்கால வினைமுற்றுக்களாக நடைபெற்றன வாதல்வேண்டும் காலப் போக்கில் உம் இடைச்

1 The Evolution of Malayalam Morphology.
பக்கம் 80. — L. V. Ramaswamy Aiyar.

சொல்லின் சிதைவாகிய மகர ஒற்று தன்னை அடுத்து நின்ற ஆன், ஆர் விகுதிகளோடு புணர்ந்து மான், மார் ஈறுகளாகப் புதிய வடிவங்களை அறிமுகப் படுத்தியது. இதன் விளைவாகப் பகர வகரங்கள் ஊர்ந்த ஆன் ஈற்று வினைகளைப் போலவே, மான் மார் ஈற்று வினைகளும் முறையே மலையாளத்திலும், தமிழிலும் எச்சப் பொருண்மையையும் உணர்த்தத் தொடங்கின.

தொடக்கத்தில் வினையை நிலைக்களனாகக் கொண்டு உம் மற்றும் அர், ஆர் இவற்றின் உறவில் பிறந்து வளர்ந்த மர், மார் விகுதிகள் ஒப்புமையாக்கத்தின் விளைவாகப் பெயரடியின் கண்ணும் தோன்றிப் பன்மைப் பொருண்மையை உணர்த்தத் தொடங்கின. தற்காலத் தமிழில் வினையடியின்கண் தோன்றி எச்சப் பொருண்மையை உணர்த்திய மார் ஈறு மறைந்து, பெயரடியின்கண் தோன்றிப் பன்மைப் பொருண்மையை உணர்த்தும் மார் ஈறு மட்டுமே நிலைத்து நிற்கின்றது. மர் ஈறும் இப்போது வினையின்கண் வழங்காமல் எட்டு, ஒன்பது பத்து இவற்றின் மாற்று வடிவங்காளாகிய எண்— . ஒன்ப தின்— , பதின் —ஆகியவற்றை அடுத்து நின்று உயர்திணை எண்ணுப் பெயர்களின்கண் வழங்குகின்றது.

பொழிலன்பர்கள் சுவைக்க.

தலையில் கை வைத்தல்.

ஒருவர் மற்றொருவர் தலையில் கையை வைத்துவிட்டார் என்ற சொற்கள் அன்றுடபொது வழக்கில் ஏதோ வொரு இடர்ப் பாட்டையோ அல்லது ஏதோவொன்றை இழக்குமாறு செய்து விட்டார் என்ற பொருளில் வழங்கப்படுகின்றன. இதன்உண்மை விளக்கம் கீழே காண்க.

"உபதேசத்தால் மெய்மையுணர்ந்து பற்றை யொழித்தலே குருவினல் வரும்பயனும், குரு பல கண்ணுல் நோக்குதல் தலையை கையாற்றொடுதல் முதலிய வகையானும் மாணவனது பாசத்தைக் களைகின்றார் இது 'பலவிதம் ஆசான் பாச மோசனந்தான் பண்ணும்' என்பதனுலுணர்த்தப்பட்டது. ஆசாரியன் தலையிற் கைவைத்தால் யான் எனதென்பனவொழியும். அவன் தலையிற் கையைவைத்தான் என்றசொல்லும் அவனைப் பற்றறச்செய்தான் என்ற பொருளிலேயே வழங்குகிறது"

(23—10—1938-இல் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் திருப்பாதிரிப்புலியூர் மடாலயத் தலைவர் உயர்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய அடிகளார் இயற்றிய சொற்பொழிவின் போது விளக்கியது)

இயேசுவும் சிலுவையும்

திரு. சோம. செல்வகுமார்., எம். ஏ. டி, பி. பி. ஏ.

எத்தனையோ கோடிமலர் பூத்து நிற்கும்
இறவாத வானத்தை விட்டு விட்டுப்
புத்தமுதத் தாய்வயிற்றில் வந்து தித்தப்
புண்ணியனே! கண்ணியனே! உனது மேனி
இத்தரையில் அணிந்ததெல்லாம் பழைய கந்தை
இருந்தாலும் உன்பாதை புதிய பாதை!
சித்தமதில் அன்புக்கே இடம ளித்துச்
செய்யாத அற்புதங்கள் செய்த வன்நீ! (1)

கள்வனுந்தான் கதிபெறவும் வழிஅ மைத்துக்
கருணைசெய்த உனைமாற்றார் உணர வில்லை.
உள்ளந்தான் திருந்திவிட்டால் பாவ மில்லை
ஓயாத ஓசையிடும் ஆசை யென்னும்
வெள்ளந்தான் பெருகிவிடின் வாழ்வே யில்லை
வித்தகனே! இதுபோன்ற நீதி கள்நீ
அல்லுந்தான் பகலுந்தான் உரைத்து வந்தும்
அநியாய உலகமின்னும் திருந்த வில்லை! (2)

சீராரும் ஏசுவெனப் பேர்ப டைத்துச்
செகமெலாம் ஓர்குலமாய் நினைத்த உன்னை
வாராலே அடித்தார்கள்; வார்க யிற்றால்
வாதையுறக் கட்டினார்கள்; தலையில் ஐய்யோ!
கூரான முள்முடியைச் சூட்டி னார்கள்!
கொடும்பாவம் எத்தனையோ தானி ழைத்தார்
பேரான உன்தோள்கள் துடிது டிக்கப்
பெருஞ்சிலுவை தானேற்றிச் சுமக்க வைத்தார். (3)

'அருமையுள தேவால யத்தை மண்ணில்
அடியோடு இடித்துவிட்டு மூன்று நாளில்
பெருமையொடு கட்டுவதாய்ப் பகர்ந்தோ னே! நீ
பிரியமுள்ள தேவகுமா ரன்தான் என்றால்
இறைவரது குமாரனே! இங்கு உன்னை நீயே
இரட்சித்துக் கொள்பார்ப்போம்' என்றும் அந்தப்
பெருஞ்சிலுவை தனில்உன்னை அறைந்த போது
பேசாத சொல்லெல்லாம் பேசி னார்கள். (4)

சிலுவைதனில் உமதுடலைச் சேர்த்த போது
சித்திரத்துப் பூமியெங்கும் அதிர்ந்த தய்யா!
மலைகளெல்லாம் பிளந்ததய்யா! கடல்க ளெல்லாம்
மாபாவம் வந்ததெனக் கொதித்த தய்யா!
நலமுடைய கல்லறைகள் திறந்த தய்யா!
நானிலங்கள் எங்குமிருள் சூழ்ந்த தய்யா!
பலநிகழ்ச்சி இதுபோலே நிகழ்ந்த போதும்
பாவிகளோ சிலுவையின்சீர் மறந்தா ரய்யா! (5)

எங்கெங்கும் நிறைந்திருக்கும் இறைவ னே! என்
இருவிழியால் சிலுவையினைக் காணும் போது
தங்கங்கள் போல்மின்னும் உம்மை யேதான்
தவறாமல் காண்கின்றேன், உம்மில் என்னை
அங்கந்தச் சிலுவையிலே காணு கின்றேன்!
அருள், நீதி நம்பிக்கை இரக்க மென்னும்
இங்கந்தப் பண்பெல்லாம் எனக்க ருள்வீர்!
ஏசுவெனும் எளியோர்க்கும் எளிய தேவே! (6)

வளையாமல் நிமிர்ந்திருக்கும் சிலுவை, இந்த
வையகத்தில் தியாகத்தின் சின்னம்; பாவ
அலையாடும் பிறப்பென்னும் கடலை நீந்தி
அழியாத இறைவனடி சேர்க்கும் தோணி!

நிலையாத இவ்வுலக வாழ்வை நீத்து
நிலையான வானத்தில் ஏற்றும் ஏணி!
தலையான சிலுவைபுவி மக்க ளுக்குத்
தக்கநெறி காட்டுகின்ற அன்பின் சின்னம் (7)

'ஏதுசெய்கின் றோமென்றே அறிந்தி டாமல்
இருக்கின்றார் இவரெல்லாம் தந்தை யே! நீர்
இதுசெய்யும் இவர்கள்பால் நெஞ்சம் கொஞ்சம்
இரங்குங்கள்! மன்னித்து விடுங்கள்,' என்னும்
முதுமொழிதான் ஏசுவின்வா யிருந்து வந்து
முழங்கியதும் இச்சிலுவை தன்னி லேதான்!
புதுமொழிகள் தோற்றுவித்த சிலுவை. இந்தப்
பூமிக்கே கர்த்தரின்பேர் சொல்லி நிற்கும்! (8)

ஆண்டவனே இவ்வுலகில் ஏசு வாக
அவதரித்து மக்களிடை கலந்து வாழ்ந்து
நீண்டதொரு சிலுவையிலே அறையப் பட்டு
நிலவுலகில் அன்புநெறி காட்டி வைத்தார்!
வேண்டுமொரு சிலுவையெனும் பேர்உ ரைத்தால்
விளங்கிடுமே ஆண்டவனின் உருவம்! நல்ல
ஆண்டவனின் அழியாத சின்ன மாக
அமைந்திருக்கும் புனிதமுள்ள சிலுவை வாழ்க! (9)

எண்ணத்தை இறைவன்பால் வைத்து மக்கள்
எல்லாரும் அன்புநெறி காண வைத்த
கண்ணொத்த சிலுவையினை உலக மக்கள்
கணமேனும் மறந்திடவா முடியும்! நல்ல
பொன்னொத்த நெஞ்சத்தின் கதவைத் தட்டி
புகழினிய கீதங்கள் இசைத்த, அந்த
வண்ணத்துச் சிலுவையினை யார்ம றப்பார்;
வளரட்டும் சிலுவையின் பேர். வாழ்க! வாழ்க!! (10)

மதிப்புரை.

சிவ - நடராசா (Siva - Nataraja, the Cosmic Dancer in Chid - Ambaram) ஆசிரியர் - திரு. J. M சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் பி. ஏ, பி எல், அண்ணாமலை நகர். விலை உருபா 3/- (ஆங்கிலம்) இந்தப் புத்தகத்தில் நடராசப் பெருமானின் நடனத்தின் தத்துவ உட்கருத்தை நன்கு விளக்கப்பெற்றுள்ளது. கோயில், அதிலுள்ள கோபுரங்கள், சபைகள் முதலியவற்றின் சிறப்புக்களை யெல்லாம் முழு விவரங்களுடன் தொகுத்துக் கூறப் பெற்றுள்ளது. இதில் சேர்க்கப் பெற்றுள்ள பல படங்கள் இப்புத்தகத்திற்கு கவர்ச்சியளிக்கிறது.

உலகத் தமிழ்க் கழகம்
இரண்டாவது பொது மாநாடு
தமிழகம் — மதுரை

தி. பி. 2001 சிலைத் திங்கள் 25, 26.
1971 சனவரி 9, 10 காரி, ஞாயிறு

மதுரை மாநகரின் வெற்றித் தனிப் பயிற்சிக் கல்லூரிப் (திருப்பரங் குன்றச்சாலை, மதுரை - 1) பேரரங்கில் மாநாடு கூடுகின்றது. மொழியியல் ஞாயிறு திருமிகு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் தலைமை தாங்குகின்றார்கள். தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் பண்டாரகர் திரு. சி. இலக்குவனார் அவர்கள், பாவலர் பெருஞ் சித்திரனார், புலவர்கள் திரு. வி. மு. சோமசுந்தரனார், திரு க. ப. அறவாணன், திரு. நிலவழகனார் முதலிய பேரறிஞர்கள் பங்கு கொள்கின்றனர். கருத்தரங்கு மாணவர் அரங்கு, பாட்டரங்கம், வரலாற்றரங்கம், அரசியல் அரங்கம் ஆகிய இடம் பெறுகின்றன. மாநாட்டிற் கலந்துகொள்ள ஆடவரும் மகளிரும், மாணவரும், மற்றவரும் அணியமாகுக.

செயலக முகவரி,
80, தெற்குப் பெருமாள் மேத்திரித்தெரு,
தெற்கு வாயில், மதுரை-1.

மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர் திரு. கா. வையை நம்பி அவர்கள் அனுப்பிய அறிக்கையின் சுருக்கம்.